பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 56

செவ்வாய்க்கிழமை
21 ஜனவரி 2025

தை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

வாழ்க்கைச் செலவை குறைக்கவில்லை அரசாங்கம்
» 03

திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தில்

# தமிழுக்கு மூன்றாமிடம் தவறான நடவடிக்கையே!



அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 21**

திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ்மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். உண்மையில் அதுவொரு தவறான நடவடிக்கை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். ☞ 11

மன்னார் படுகொலைகள்

## குற்ற ஒப்புதலை வழங்க சந்தேகநபர்கள் சம்மதம்!

மன்னார், ஜன. 21
மன்னார் மாவட்ட நீதிமன்றுக்கு முன்பாக இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில், சந்தேகநபர்கள் மூவரும் நீதிவான் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்க முன்வந்துள்ளனர். இதையடுத்து அவர்கள் மூவரும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
மன்னார் நீதி ☞ 11



நாடக உலகின் பிதாமகன்

## குழந்தை சண்முகலிங்கம் தீயுடன் நேற்றுச் சங்கமம்

யாழ்ப்பாணம், ஜன. 21
நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகரும், ஈழத்து தமிழ் நாடக உலகின் பிதாமகனுமான குழந்தை ம.சண்முகலிங்கத்தின் புகழுடல் நேற்று மாலை தீயுடன் ☞ 11



## அமெரிக்க அதிபராக பதவியேற்றார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜன 21
வரலாறு காணாத உச்சக் கட்டப் பாதுகாப்புக்கு மத்தியில் அமெரிக்காவின் 47ஆவது அதிபராக ட்ரம்ப் நேற்றுப் பதவியேற்றார். நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற ☞ 11

## எரிபொருள் விலையை குறைக்க பேச்சுகள்!

கொழும்பு, ஜன. 21
எரிபொருள் விலையைக் குறைப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பெற்றோலிய ☞ 11

## கட்டுநாயக்கவில் சூடு மூன்று பேருக்குக் காயம்!

கொழும்பு, ஜன. 21
கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.
விமான நிலையத்தில் விலங்குகள் மற்றும் பறவைகளால் ஏற்படும் ஆபத்துகளைக் கட்டுப்படுத்தும் ☞ 11

மன்னாரில்

## பெண்ணொருவர் சடலமாக மீட்பு

யாழ்., ஜன. 21
மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காடு பகுதியில் ரயில் தண்டவாளத்துக்கு அருகில் இளம் பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் அந்தப் பெண் மோதுண்டு உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படு ☞ 11

அரசமாளிகை விவகாரம்;

## அரசாங்கம் உத்தரவிட்டால் வெளியேறுவாராம் மஹிந்த!

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21
அரசாங்கம் அறிவித்தல் விடுக்கும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதிக்குரிய அரச வதிவிடத்திலிருந்து வெளியேறுவதற்கு மஹிந்த ராஜபக்ச தயாராகவே இருக் ☞ 11



## 108 கிலோ கஞ்சா குருநகரில் மீட்பு

நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் நேற்று 108 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அவற்றைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் நால்வர் ☞ 11



முச்சந்தி முராரி

'அப்ப இந்தமுறையும் எலக்சன் காசில்லாம குழம்பப்போகுதோ?'

குருநகர் மினி சூறாவளி

## இழப்பீடுகள் வழங்க உடன் நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய மினி சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தெரிவித்துள்ளார். ☞ 11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்னும் 3 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சு பரிந்துரைத்ததும் மின்கட்டணம் குறைக்கப்படும்

## மின்சாரசபைத் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.21**

**நிதி அமைச்சின் பரிந்துரையின்படியே மின்கட்டண நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவது தீர்மானிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மேற்பார்வை அதிகாரம் நிதி அமைச்சரிடமே உள்ளது. இலங்கை மின்சாரசபை மற்றும் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகிய இரு நிறுவனங்களும் நிதி அமைச்சின் கண்காணிப்பின் கீழேயே உள்ளன. மின்கட்டணத்தை 20 வீதத்தால் குறைப்பது நிதி அமைச்சரின் பரிந்துரையின் கீழேயே இடம்பெறும் என்றார். (எ-இ)

# மருத்துவ உதவியாளர்களுக்கு இனிமேல் அதிகாரபூர்வப் பட்டம்

*கொழும்பு, ஜன.21*

*மருத்துவமனை உதவியாளர்கள் 'பராமரிப்பாளர்' (Caregiver) என்ற அதிகாரபூர்வப் பட்டத்தைப் பயன்படுத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார். எதிர்காலத்தலீ செவிலியர் ஊழியர்களின் சீருடையில் 'Caregiver'என்ற சின்னம் சேர்க்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை சுதந்திர செவிலியர் சங்கத்தின் தலைவர், டபிள்யூ. ரோய் டி மெல், இந்த அதிகாரபூர்வப் பெயர் மற்றும் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டின் செவிலியர்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களாக மதிக்கப்படுவர் -என்றார். (எ-இ)*

# இன்ரர்போல் தேடிய நால்வர் கைதாகினர்

கொழும்பு, ஜன.21

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக இலங்கைப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த நால்வர் சர்வதேசப் பொலிஸாரால் (இன்ரபோல்) கைதுசெய்யப்பட்டுள்ளனர். டுபாய் உட்பட 4 நாடுகளில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் உள்ளவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருந்தநிலையில், சந்தேகநபர்களின் பட்டியல் இன்ரபோலிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அதையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த போதைப்பொருள் வர்த்தகரும், திட்டமிட்ட குற்றக்குழுவின் உறுப்பினருமான ஜனித் மதுசங்க அண்மையில் இந்தியாவின் மும்பையில் கைதுசெய்யப்பட்டிருந்தார். (எ-இ)

# இந்த ஆண்டில் மட்டும் 8 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, ஜன.21

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 8 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் நடந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் காயமடைந்த 5 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (எ-இ)



# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கடந்தவாரத்துடன் ஒப்பிடும் போது நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 292.29 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 300.81 ரூபாவாகவும் நேற்றுக் காணப்பட்டது. (எ-இ)

# ரயில் பயணச்சீட்டில் மோசடி பொலிஸ் உத்தியோகத்தர் கைது

பதுளை, ஜன. 21

இணையத்தில் ரயில் பயணச்சீட்டு மோசடி செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அண்மையில் ரயில் பயணச்சீட்டுக்கள் இணையத்தில் 42 வினாடிகளில் விற்பனை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் இணையத்தில் பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்து வெளிநாட்டு உல்லாசப்பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

2 ஆயிரம் ரூபா பெறுமதியான பயணச்சீட்டுகளை இவர் 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்து வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (எ-22,6)

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் கணக்கெடுப்பு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 21

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இன்று ஆரம்பமாகும் என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. 2 ஆம் கட்டத்துக்காக நலன்புரி நன்மைகள் சபை சுமார் 8 இலட்சம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. இந்த விண்ணப்பங்களில் இருந்து நலத்திட்ட உதவிகளைப் பெறத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில், வீடு வீடாகச் சென்று இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. அஸ்வெசுமத் திட்டத்தின் முதல் கட்டத்துக்காக நலன்புரி நன்மைகள் சபை 3.4 மில்லியன் விண்ணப்பங்களைப் பெற்றது. அதில் சுமார் 1.8 மில்லியன் பேர் அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெறத் தகுதியானவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். [illegible]

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஊரெழுவில் 3 பரப்பு 8.53 குளியுடன் கூடிய காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 074 236 6796 070 528 9745

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | 0430 | G | 2 4 8 4 4 5 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | 2696 | T | 09 35 49 72 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | V | 06 13 30 74 | 4857 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | | 04 41 51 54 | 4408 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | H | 27 | 18 36 66 75 | 1872 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | U | 22 25 27 64 | 2522 |

**JAYODA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.01.2025 | திங்கட்கிழமை | N | 15 16 17 64 | 2096 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு ஏற்றவாறே உத்தரவாதவிலை நிர்ணயம்

## விவசாயப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,ஜன.21**
**விவசாயிகள் திருப்தியடையும் வகையில் நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் என்றும், கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கு உத்தரவாத விலையை விடவும் மேலதிகமாக 2 ரூபா வழங்கப்படும் என்றும் விவசாயத்துறைப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

நெல்லுக்கு நியாயமான வகையில் உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அரிசி மாபியாக்கள் ஒழிக்கப்படவேண்டும் என்பதைத் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டோம். இப்போதும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளோம். அரிசித் தட்டுப்பாட்டுக்காக அரசாங்கத்தைக் குறைகூறுபவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும்.
2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் குறைவான அளவில்தான் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது. அரிசித் தட்டுப்பாடு தற்போது தீவிரமடைந்துள்ளதற்கு இதுவும் ஒரு பிரதான காரணியாகும். மறுபுறம் அரசுக்குச் சொந்தமான நெற்களஞ்சியசாலைகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.
விவசாயிகள் திருப்தியடையும் வகையில் நெல்லுக்கான உத்தரவாத விலை தீர்மானிக்கப்படும். நெற்களஞ்சியசாலைத் திணைக்களத்துக்கு நெல்லை விற்பனை செய்யவேண்டும் என்று விவசாயிகளிடம் கோருகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

# தேசியத்தைப் பாதுகாக்க செயற்பாட்டு அரசியல்!

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

கொழும்பு,ஜன.21
தேசியத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடுவோம் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு பொருளாதாரம் மற்றும் சமூகக் கட்டமைப்பில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் ஒருசில செயற்பாடுகளால் நாட்டின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. நாட்டின் தேசியம் தொடர்பில் அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லை.
புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்துத் தற்போது பேசப்படுகிறது. இலங்கையை மதச்சார்பற்ற நாடாக மாற்றியமைக்கும் வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் அரசாங்கத்தில் முன்னிலைப் பதவிகளில் உள்ளார்கள். அரசாங்கமும் அந்த நிலைப்பாட்டில்தான் உள்ளது.
தேசிய மக்கள்சக்தி தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு முரணாகத் தற்போது செயற்படுகிறது. அரசாங்கத்துக்குக் கடந்தகாலத்தை நினைவுபடுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது - என்றார். (எ-33)

# வடக்கில் களமிறங்கும் பெரமுன

கொழும்பு, ஜன.21
உள்ளாட்சிச்சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் நேற்றுத் தெரிவித்தார்.
மொட்டுக்கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
உள்ளாட்சிச்சபைத் தேர்தலுக்குத் தயாராகிவருகின்றோம். வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலுள்ள அனைத்து சபைகளுக்கும் எமது கட்சி போட்டியிடும். அதேவேளை, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகத் திறக்கப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# வாழ்க்கைச் செலவைக் குறைக்க முயற்சிக்கவில்லை அரசாங்கம்!

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.21
நல்லாட்சி அரசாங்கத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தின் ஊடாகப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இந்த அரசாங்கம் மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரித்ததேதவிர குறைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.
நல்லாட்சி அரசாங்கத்தில் பொருள்களின் விலைகள் 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டன. அதுமாத்திரமின்றி பெரியளவில் மின்கட்டணமும் குறைக்கப்பட்டது. விலைக்குறைப்புகள் மாத்திரமின்றி அரச உத்தியோகத்தர்களின் சம்பளம், ஓய்வூதியம் என்பனவும் அதிகரிக்கப்பட்டன.
மின்கட்டணக்குறைப்புத் தொடர்பான தீர்மானம் சுயாதீன ஆணைக்குழுவான பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானமாகும். மின்சக்தி அமைச்சு மற்றும் நிதி அமைச்சு இதற்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாகவே தெரிய வருகிறது. அதனாலேயே இந்தத் தீர்மானம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-33)




நேற்றுப் பெய்த மழைக்கு இண்டைக்கு முளைச்ச காளான் எண்டு பொதுப்பட ஒருபழமொழி அடிக்கடி சொல்லிக் கேள்விப்பட்டிருப்பியள். இப்ப மழைக்கு காளான் முளைக்குதோ இல்லையோ கடற்கரையில புத்தர் சிலையளோட மர்மப்படகு வீடுகள் கரையொதுங்காமல் விடுறேலை. அதுவும் வடிவாச் சோடிச்சு, மூங்கிலால கட்டி மிதந்துவாற உந்த மர்மப்படகு வீடுகளைப் பற்றி எங்கட ஆக் கள்,ஆளாளுக்கு ஒவ்வொரு கதையளைக் கட்டிக்கொண்டு இருக்கினம். அதால அந்த மர்மப்படகு வீடுகள் எங்கையிருந்து , எப்பிடி,ஏன் இஞ்ச வருகுதுகள்? எண்டொருக்கா பட்சி அங்கையிஞ்ச அலசிப் பார்த்து ஒருமாதிரி உண்மையைக் கண்டு பிடிச்சுப்போட்டுது.

உந்த மர்மப்படகு வீடுகள் எல்லாம் ரோஹிங்ய அகதிகள் வந்த நாட்டில இருந்துதான்(மியான்மரில இருந்து) வருகுதாம். அங்கையும் புத்தரைக் கும்பிடுற ஆக்கள் தானே கூட இருக்கினம். அவையின்ர ஆய்க்கினை தாங்கேலாமல் ரோஹிங்ய அகதியள்தான் வருகினமெண்டு பார்த்தால், படகு வீடுகளுக்கும் இலங்கையைத்தான் பிடிச்சு இஞ்ச மிதந்து வருகுதுகள் போல. உண்மையில இந்தப் படகுவீடுகளை எங்கட ஊரில பட்டம் விடுறமாதிரி இப்பிடி வகைதொகையா கடலில விடுறதுக்குக் காரணம், நேர்த்திக்கடனாம். மியான்மரில புத்தரைக் கும்பிடுற ஆக்களிட்ட கடலுக்கு அடியில நாகலோகம் இருக்கெண்டு கடும் நம்பிக்கை இருக்கு. தங்க ளுக்கு ஏதும் பிரச்சினை, கஷ்டம் எண்டு வந்தால் அதுக்கு காரணம் நாகதோசம் எண்டும் அவை நம்புகினம். அப்பிடி தங்களுக்கு இருக்கிற தோசம் இல்லாமல் போகவேணுமெண்டால், நாகலோகத்தில இருக்கிற 'உபகுப்த மஹா அரஹந்த தேரர்' மனம் வைக்கவேணுமெண்டு அவை நினைக்கினம். அப்பிடி அந்தத் தேரரை லேசில மனம் இளகவைக்க முடியாதாம். அவர் நாகலோகத்தில இருக்கிறதால தங்கட பிரச்சினை என்னெண்டு இந்தப் படகு வீட்டில எழுதி, 'உபகுப்த மஹா அரஹந்த தேரருக்கு' பிடிச்ச நீர்ப்பிரசாதத்தை பூசையெல்லாம் செய்து கடலில மிதக்கவிடுவினமாம். அந்தப்படகு அப்பிடியே நடுக்கடலுக்குப் போய், பிறகு நாகலோகத்துக்கும் போய், அந்தத் தேரரிட்ட இவையின்ர பிரச்சினையையும், நீர்ப்பிரசாதத்தையும் சேர்க்குமெண்டது மியான்மர் பௌத்தர்களின்ர ஐதீகம். (இலங்கைக்கு சங்கமித்தை அரசமரக்கிளையைக் கொண்டுவரேக்கையும், கடலுக்கடியில இருக்கிற நாகலோகத்தில கொண்டுபோய் மூண்டுநாள் வைச்சு பூசை செய்துபோட்டு வந்தவா எண்டு மகாவம்சத்தில இருக்காம். )

அந்த ஐதீகப்படித்தான் அடிக்கடி தங்கட பிரச்சினை தீரவேணும் எண்டு நேர்த்திக்கடன் வைச்சு, உந்தப் படகு வீடுகளை அவையள் கடலில மிதக்கவிடுகினம். அப்பிடி அவை படகுகளை விடேக்க காத்து இஞ்சாலிப்பக்கம் அடிச்சால், அதுகளும் இழுபட்டு கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி எண்டு கரையொதுங்குதாம். மற்றப்படி அந்தப்படகு வீட்டில வேறயொரு மர்மமில்லையாம். சிலவேளை மியான்மர்க்காரர் நாகலோகம் எண்டு நினைக்கிறது எங்கட நாட்டைத்தானோ தெரியேலைக் கண்டியளோ.

நேற்றையான் பட்சியில கலாசார மண்டபப் பேர் மாத்திற விழா நடந்ததெல்லோ எண்டதுக்குப் பின்னால 'அதுமுடிஞ்ச கையோட தெல்லிப்பழையில் தேசியப் பொங்கல் விழா நடந்தது' எண்ட வரி விடுபட்டிட்டுது. அதால எல்லாரும் பெண் அமைச்சரை இருத்தி எழுப்பின சம்பவம் கலாசார மண்டபத்தில நடந்ததெண்டு நினைச்சிட்டினம். உண்மையில் அந்தச் சம்பவம் நடந்தது தெல்லிப்பழையிலதான் பாருங்கோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத இலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும் போது வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கடன்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கடகம்:** தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்** வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன் வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# நெல் கொள்வனவின்போது தராசில் நூதனமாக மோசடி

### பரந்தனில் சம்பவம்

கிளிநொச்சி, ஜன.21

விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும்போது நிறுவையில் செய்யப்பட்ட மோசடி பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் பரந்தன், குமரபுரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.
நெல் கொள்வனவுக்காக பாரவூர்தி ஒன்றுடன் வந்த குழுவொன்றே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளது. பரந்தன் பிரதேசத்தில் நெல் கொள்வனவில் அவர்கள் பயன்படுத்திய தராசின் நிறுவை அளவில் மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து மக்கள் அந்தத் தராசை சோதனை செய்த போது 10 கிலோ குறைவாகக் காட்டும் விதத்தில் அந்தத் தராசு மாற்றியமைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.
இதுதொடர்பாகப் பொலிஸாருக்கு மக்கள் அறிவித்ததையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விவசாயிகளின் முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.
பின்னர் ஏற்கனவே அளக்கப்பட்ட நெல் பிறிதொரு தராசில் அளக்கப்பட்டபோது விவசாயி ஒருவரிடம் இருந்து 24 ஆயிரம் ரூபா குறைத்து மதிப்பிடப்பட்டு



நெல் கொள்வனவு செய்யப்பட்டமை கண்டறியப்பட்டு, அந்தப் பணம் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது.
மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபடுகின்றோம். நோய்த்தாக்கம் மற்றும் பருவம் தப்பிய மழையால் ஏற்கனவே அழிவுகளைச் சந்தித்திருக்கின்றோம். நெல்லுக்கு நியாயமான விலையும் கிடைப்பதில்லை. இப்போது நெல் கொள்வனவின் போதும் மோசடி செய்கின்றனர் என்று விசனத்தோடும், ஆதங்கத்தோடும் தெரிவித்தனர் விவசாயிகள்.
ஏனைய இடங்களிலும் நெல் கொள்வனவின்போது நெல் கொள்வனவாளர்கள் தொடர்பாக விவசாயிகள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-25,113,214)





# முல்லைத்தீவில் பட்டத்திருவிழா

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு வட்டுவாகல் கிராமத்தைச்சேர்ந்த பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் ஏற்பாட்டில், பட்டத்திருவிழா முல்லைத்தீவு கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் குணபாலன், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் இராஜயோகினி ஜெயக்குமார், வட்டுவாகல் அறநெறிப்பாடசாலையின் முதல்வர் அப்புத்துரை செல்வரட்ணமும் உட்படப் பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டனர். (எ-41)

# குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.21

தற்போது யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குருநாகல் மற்றும் கொழும்பிலிருந்து குருதியைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று யாழ். போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
குருதிக்கொடையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரும் யாழ். போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவுக்கு நேரடியாக வந்து குருதிக் கொடை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுள்ளனர். (எ-25,66)




# வேலையற்ற பட்டதாரிகள் நேற்றும் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன.21

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுத்தூபிக்கு முன்பாகக் கூடிய வேலையற்ற பட்டாதாரிகள் தமிழ்த்தாய் வாழ்த்துடன் போராட்டத்தை ஆரம்பித்தனர். அங்கிருந்து வடக்கு ஆளுநர் அலுவலகம்வரை சென்று அங்கும் கவன வீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
வடக்கு மாகாணத்தில் திணைக்களங்களில் வெற்றிடங்கள் உள்ளன. அந்த வேலைவாய்ப்புகள் எமது பட்டதாரிகளுக்கு வழங்கப்படவேண்டும். கடந்த முறை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் போன்று வேடமிட்டுப் போராட்டம் நடத்தியமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.
எமக்குள்ளும் கூலித்தொழிலாளர்கள் உள்ளனர். சுத்திகரிப்புத் தொழில் நகைப்புக்குரியதல்ல. இலங்கை அரச கட்டமைப்பில் பட்டப்படிப்பு மூலம் நாம் பெற்றது என்ன என்பதற்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவே அவ்வாறு செய்தோம். அன்றைய போராட்டதின்போதே அதுதொடர்பாக தெளிவை வழங்கியிருந்தோம்.
எமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை வடக்கு ஆளுநரிடம் கையளிக்கவுள்ளோம். அழுத்தம் மூலமே எமக்கான பதில் கிடைக்குமானால் அதைச் செய்யத் தயாராகவே இருக்கின்றோம் என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நல்லவராய் இருப்பது நல்லதுதான்.
ஆனால் நல்லது, கெட்டது
தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது.

– பெர்னாட்ஷா –


# குழந்தை இட்ட தீ!

80களின் முற்பகுதியில்தான், எமது விடுதலைக்கான நெருப்பு பரவலடையத் தொடங்கியது. சிறுபொறியாகக் கனன்று கொண்டிருந்த விடுதலைக்கான நெருப்பை, தமிழ்மக்கள் சகலரினதும் மனங்களில் பற்றவைத்த அற்புதமொன்றை நிகழ்த்தியது ஒரு நாடகம். 'மண்சுமந்த மேனியர்' என்ற அந்த நாடகம், தமிழினம் இதுவரை பட்ட துன்பதுயரங்களையும், அதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் சொல்லிநின்றது. அதைப் பார்த்த பின்னர்தான் பலருக்கும் ஏன் விடுதலை வேண்டும்? என்ற புரிதல் ஏற்பட்டது. மின்னாமல் முழங்காமல் ஒரு நாடகம் மக்களின் மனதில் பெரும் மாற்றமொன்றை நிகழ்த்தி ஒருபெரும் வரலாற்றுக்கடமையை நிறைவேற்றியது. அந்த நாடகத்தின் மூலவர்களில் ஒருவர் ஈழத்து தமிழ் நாடக அரங்கின் பிதாமகன் குழந்தை ம.சண்முகலிங்கம்.

கலைவடிவங்கள் வெறுமனே பொழுதுபோக்குக்கானவை மட்டுமல்ல. அவை பெரும் சமூகமாற்றங்களையும் நிகழ்த்தவல்லன. அப்படிப் பெரும் அதிர்வுகளை, மாற்றங்களை நிகழ்த்திவிட்டு அடக்கத்தோடு இருந்தவர்தான் குழந்தை ம.சண்முகலிங்கம். அவர் பெயருக்காகவோ புகழுக்காகவோ பொழுதுபோக்குக்காகவோ நாடகங்களைப் படைக்கவில்லை. சமூகத்துக்கு என்ன தேவையோ அவற்றை தன் நாடகங்கள் பேசவேண்டும், செய்யவேண்டும் என அவர் விரும்பினார். அதனாலேயே ஒருவடிவம் என்றில்லாமல் நவீன நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், சிறுவர் நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம் என அரங்கின் அத்தனை சாத்தியங்களையும் பயன்படுத்தினார். சமூகவிடுதலை மட்டுமல்லாது, பெண்ணியம், வர்க்க விடுதலை, சுரண்டல்கள், உளவியல் பிரச்சினைகள், வாழ்வியல் மாற்றங்கள் என அவர் பேசாப்பொருள்களே இல்லையெனலாம். கூடவே இந்த வடிவங்களில் மாற்றங்களையும், புதுமைகளையும் அவர் கொண்டுவந்தார். அந்த வடிவங்களுக்கென புதிய பாதையையும் அவர் வகுத்தார். ஏறக்குறைய அவர் 40 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கிய நாடகப் படைப்பாக்க முறைமையைத்தான் இன்னும் ஈழத்தமிழ்நாடகவியலாளர்கள் 'நவீனதமிழ் நாடகம்' என்று பின்பற்றுகின்றனர். 40 வருடங்களுக்கும் மேலாக அவரைத்தாண்டி ஈழத்தமிழ் நாடகத்துறை ஓர் அடிகூட எடுத்துவைக்கவில்லை என்பதே உண்மை.

சமூகமாற்றமென்பது வெறுமனே விடுதலைக்கான கனவைவிதைப்பதுமட்டுமல்ல.நாளையவிருட்சங்களான சிறுவர்களையும் ஆளுமையாளர்களாக உருவாக்குவதும் ஒரு சமூகமாற்றமே. ஈழத்தில் சிறுவர் நாடகங்களுக்கான சட்டகத்தையும் குழந்தை சண்முகலிங்கமே உருவாக்கினார். விலங்குகளினூடாக நடைமுறை வாழ்வியலையும், சமூக விடுதலையையும் சிறுவர்களிடத்தே ஊட்டுவதோடு, குழந்தைகளின் உளவியலையும் விருத்தி செய்யும் வித்தையை தன் சிறுவர் நாடகங்களினூடாக முன்வைத்தவர் குழந்தை ம.சண்முகலிங்கம். இப்படியாக நாடக உலகின் எல்லாத்திசைகளிலும் அவர் பெயர் பொறிக்கப்படுமளவுக்கு, பேரற்புதங்களை நிகழ்த்தியபோதும், அவை பற்றிய எந்த ஆர்ப்பரிப்புகளுமற்ற அடக்கமான, அமைதியான ஆளுமைக்கடலாகவே அவர் கடைசிவரை வாழ்ந்துகாட்டினார். பேசாப்பொருளையெல்லாம் பேசிநின்றவரின் பேச்சடங்கி, நேற்றுத் தீயுடன் கலந்துவிட்டபோதும், குழந்தை சண்முகலிங்கம் மூட்டிய அரங்கத்தீ ஈழத்தமிழினம் உள்ளவரை எரிந்துகொண்டேயிருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# கண்காட்சியால் சீனா அதிருப்தி!



கொழும்பு,ஜன.21

**இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் நெதர்லாந்துத் தூதரகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஒளிப்படக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ள தென் சீனக்கடல் தொடர்பான படங்கள் தொடர்பில் சீனத்தூதரகம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.**

ஏற்கனவே ரஷ்யத் தூதரகம் இந்த ஒளிப்படக்கண்காட்சியில் உக்ரைன் ரஷ்ய யுத்தம் தொடர்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒளிப்படங்கள் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையில் இப்போது சீனத்தூதரகமும் தென் சீனக்கடல் தொடர்பான படங்கள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இந்த ஒளிப்படக்கண்காட்சி 24 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையத்தில் நடைபெறவுள்ளது. (எ-33-6)

# ஈ-பாஸ்போர்ட் வழக்கை துரிதப்படுத்த பணிப்பு

கொழும்பு, ஜன.21

நாட்டில் மீண்டும் கடவுச்சீட்டு நெருக்கடி ஏற்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஈபாஸ்போர்ட் கேள்விகோரல் தொடர்பான நீதிமன்ற வழக்கைத் துரிதகதியில் விசாரிப்பதற்குத் தலையிடுமாறு சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதியில் பெறப்பட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் இந்த ஆண்டின் முதல்பாதிக்கு மட்டுமே போதுமானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# நகைக்கான வற் வரியை குறைக்கக் கோரிக்கை!

கொழும்பு, ஜன.21

நகைகளுக்கான வற் வரியை குறைக்கவேண்டும் என்று நகை வர்த்தகர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அயல் நாடான இந்தியாவில் 3.5 வீத வரியே அறவிடப்படுகிறது. தங்கத்தை இறக்குமதி செய்யும்போது சுங்க வரி உட்பட பல வரிகளைச் செலுத்த வேண்டியுள்ளது. இதைவிட சமூக பாதுகாப்பு வரியும் அறவிடப்படுகிறது. இதனால் நகைத் தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தங்க நாணயமொன்றின் பெறுமதி 2 இலட்சம் ரூபாவாகக் காணப்படுகிறது. பஞ்சாயுதம் ஒன்றின் பெறுமதி 50 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகிறது. சாதாரண குடும்பங்களால் இவ்வளவு தொகை பணம் செலவு செய்து நகை செய்யமுடியாது. திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற சடங்குகளில் நகைகள் அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. அரசாங்கம் வற் வரியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என நகை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-22,6)



# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா,ஜன.21

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா, நெடுங்கேணியில் 29 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். நெடுங்கேணிப் பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிலோ 140 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-22,110)

# மனுஷவின் வாக்குமூலம் இன்று

கொழும்பு, ஜன.21

தென்கொரிய வேலைவாய்ப்பு சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலமளிக்க உள்ளார் என்று அவரது சட்டத்தரணி நேற்றுக் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.


இந்த விடயத்தில் கைதுசெய்யப்படுவதைத் தடுக்க முன்பிணைகோரி மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த முன்பிணை மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை
புதன்கிழமை - தை - 09
22.01.2025
சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : 12.35 - 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டச் செயலகத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல்





வவுனியா, ஜன. 21

வவுனியா மாவட்டச் செயலகத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் ஆலயப் பிரதம குரு தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் ஆகியோரால் வயலில் அறுவடையில் பெறப்பட்ட நெற்கதிர்கள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டிலில் வவுனியா பசார் வீதி ஊடாக ஊர்வலமாக வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டது.

அங்கு புதிய நெல்லை மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உரலில் இட்டுக் குற்றி அரிசியாக்கி புத்தரிசியில் பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைத்து வழிபட்டனர். (ச-22-25-110-18)

# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்!



யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாணப் பிரதேச ஆளுகைக்குட்பட்ட பொருண்மியம் நலிந்த பிள்ளைகளுக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நீதி அமைச்சினால் காலணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் , யாழ். பிரதேச செயலாளர் சுதர்சன் , பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-22-125)



# பிரதேச செயலகங்களுக்கிடையே வருடாந்த விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடமாகாணப் பணிப்பாளர் பா.முகுந்தன், உதவி மாவட்டச் செயலர் தர்ஷனி, பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள், மாவட்டச் செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர், பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22-125)



பளை தம்பகாமம் துர்க்கா விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் அவை வழங்கப்பட்டன. (ச-25-9)



வரலாற்றுப் பழமைவாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் 53 ஆவது வருடாந்த மார்கழிப் பஜனை ஊர்வலம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. இந்தப் பஜனை ஊர்வலத்தில் மழைக்கு மத்தியிலும் அடியவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச)



முகமாலை றோ.க.த.க பாடசாலையின் அலுவலகத் திறப்புவிழா மற்றும் நிழற்படப்பிரதி இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி வலையில் மனித எலும்புகள்!

## விசாரணைகள் தீவிரம்

கொழும்பு, ஜன.21

களுத்துறை.மில்லனிய, ஹல்தொட்ட பிரதேசத்தில் உள்ள கால்வாய் ஒன்றில் மீன்பிடி வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கால்வாய்க்கு மீன்பிடிக்கச் சென்ற குழு ஒன்று ஓடைக் கரையிலுள்ள மூங்கில் புதருக்கு அருகில் மீன்பிடி வலையை வீசியபோது வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதன்பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மேலும் பல மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பில் பொலிஸாருக்குஅறிவிக்கப்பட்டுள்ளது. ஹொரணை நீதிவான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், மனித எலும்புகளை ஹொரண சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (எ-இ)

# அரசின் நன்றிக்கடன் பட்ஜெட்டில் தெரியும்

## கயந்த எம்.பி. கூறுகின்றார்

**கொழும்பு, ஜன.21**

**மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கிய மக்களுக்கு அரசாங்கம் எவ்வாறு நன்றிக்கடன் செலுத்தப்போகின்றது என்பது சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் தெரியும் என்று ஐ.ம.ச. நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று சிலர் இன்றும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

காலநிலையால் பாதிக்கப்பட்ட விசாயிகளுக்கான இழப்பீடு மற்றும் உரமானியத்தைக் கூட இந்த அரசாங்கத்தால் வழங்க முடியாதுள்ளது. அரிசி மற்றும் துறைமுகத்தில் கொள்கலன்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இன்று வரை தீர்வுகிட்டவில்லை.

வாகனங்களில் மேலதிக பாகங்களை அகற்றுவதைத் தவிர அரசாங்கம் மக்களுக்காக எந்த வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை**

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2025**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 21.01.2025 தொடக்கம் 05.02.2025 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 06.02.2025 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.02.2025 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான மீள்கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 2. | PMS-11 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |
| 3. | PMS-12 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 06.02.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திகரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு (இங்கு ஒருவர் என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும்) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

20.01.2025

CR/44144) J-1

# மஹிந்தவின் பாதுகாப்பை நீக்க அநுரவுக்கு உரிமை கிடையாது!

## போர் நாயகன் கதையை மீள எடுக்கின்றது பெரமுன

கொழும்பு, ஜன.21

புலிகளிடமிருந்து இந் நாட்டைப் பாதுகாத்த மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது. யாரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் மஹிந்தவை குறி வைத்துள்ளது? என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

மொட்டுக்கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளதாவது:-

மஹிந்த ராஜபக்சவின் வீட்டு வாடகை தொடர்பில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார். ஜனாதிபதிக்கென புறக்கோட்டையில் ஜனாதிபதி மாளிகை உள்ளது. அங்கு ஜனாதிபதி தங்கியுள்ளாரா என்பது தெரியாது. ஆனால் அந்த ஜனாதிபதி மாளிகை எவருக்கும் வாடகைக்கு வழங்கப்படவில்லை. அந்த வீட்டின் வாடகைப் பெறுமதியையும் ஜனாதிபதி வெளியிட வேண்டும். அலரி மாளிகையையும் எவ்வளவு வாடகைக்கு வழங்க என்பது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ச என்பவர் இந்நாட்டை பாதுகாத்த தலைவர். 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்த தலைவர். கிராமங்களுக்கு சவப்பெட்டிகள் வருவதை நிறுத்திய தலைவரும் அவரே. போருக்கு பின்னர் நாட்டை பொருளாதார ரீதியிலும் கட்டியெழுப்பியவர். அநுரவின் தாயாரின் ஊருக்குக்கூட மஹிந்தவே மின்சாரம் வழங்கினார்.

இப்படிபட்ட தலைவரின் பாதுகாப்பை இல்லாது செய்வதற்கு ஜனாதிபதிக்கு உரிமை கிடையாது. அவரின் பாதுகாப்பு யாரின் நோக்கத்துக்காக குறைக்கப்படுகின்றது? - என்றார். (எ-44)



உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் தைப்பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க.உமாபாலன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய

அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில் 22.06.1937

ஆண்டவன் அடியில் 22.12.2024

கடந்த 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் குலசேகரம் குணபாலசிங்கம்**

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யா/விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் கவலை தெரிவித்தும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்

(CS/2322) J-1

குடும்பத்தினர்
021 225 2130

# பொலித்தீன் தொடர்பாக 16 சுற்றிவளைப்புக்கள்

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். மாவட்டச் செயலக அலுவலகத்தால் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் கைத்தொழில் மற்றும் சட்ட விதிகளை மீறும் வகையிலான பொலித்தீன் தொடர்பான 16 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

16 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 235 வியாபார நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

இந்த வியாபார நிலையங்களில் 2 வியாபார நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை தண்டப்பணம் விதிக்கப்படாத நிலையில் வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்றன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக இந்தத் தகவல்கள் பெறப்பட்டன.

(ஏ-33-125)

**கொள்வனவு செய்யப்படும்**
நெல், தானியங்கள், மில் உபகரணங்கள்
கொள்வனவு செய்யப்படும்-மாப்பியன் மில்
தொடர்பு: 077 772 2215

# முதலாம் ஆண்டு நினைவுகளுடன்

அன்னை மடியில் 10 . 04 . 1973



இறைவன் அடியில் 21 . 01 . 2024

**அமரர் தேவதாஸ் கண்ணதாசன்**

நிலவு கூட இவ்வுலகை
ஒரு நாள் நிராகரித்து விடுகிறது - ஆனால்
ஒருநிமிடம் கூட எங்கள் இறைவனை
நினைக்காத நேரமில்லை இறைவா

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
(கண்ணன் கடை)

(CS/57278) J-1

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், நண்பர்கள்

# சிவா பசுபதி காலமானார்


இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி அவுஸ்திரேலியா சிட்னியில் நேற்று முன்தினம் காலமானார்.

இலங்கை அரச தலைமை முன்னாள் வழக்குரைஞரும், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபருமான சிவா பசுபதி ஓய்வுபெற்ற பின்னர் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னியில் வாழ்ந்து வந்தார். 2002இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பேச்சுகள் தொடங்கிய போது, விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவுக்கு உதவவும் ஆலோசனைகளை வழங்கவும் விடுதலைப்புலிகளால் நிறுவப்பட்ட அரசியல் விவகாரக்குழுவுக்குசிவா பசுபதி சட்ட ஆலோசகராகப் பணியாற்றியிருந்தார்.

அத்துடன் 2002 - 2006 காலப்பகுதியில் நோர்வே தலைமையிலான அமைதிப் பேச்சுகளிலும் அவர் பங்கேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

மலர்வு 05 . 04 . 1960



உதிர்வு 22 . 12 . 2024

கடந்த 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கணபதி சிவஞானேஸ்வரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் சபிண்டிகரணக் கிரியைகள் அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவிலும் நடைபெறும். நாளை (22.01.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்களை கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

(CR/44143) J-1

குடும்பத்தினர்
சி.நிதுசன் (மகன்) - 077 193 0450

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1962



மறைவு 17 . 01 . 2025

**மார்க்கண்டு சதானந்தன்**

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Bern ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சதானந்தன் கடந்த 17.01.2025 வெள்ளிக்கிழமை சுவிஸில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (பிரபல வர்த்தகர் மருதானை) - புனிதவதி (பூமணி) தம்பதியரின் அன்பு மகனும், நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் (பிரபல வர்த்தகர் - ஜாஎல) - நாகமுத்து தம்பதியரின் மூத்த மருமகனும், ரஜனி (ஆசிரியை - இலங்கை, சுவிஸ்) அவர்களின் அன்புக் கணவரும், சற்பிரஜா அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன், கமலானந்தன் மற்றும் திலகவதி (ராசாத்தி), சச்சிதானந்தன், தயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி (ஆசிரியை) அவர்களின் உடன் பிறவா சகோதரரும், ஏகாம்பரநாதன், சசிகலா, அருள்விழி, காலஞ்சென்றவர்களான ரஞ்சன், ராகினி மற்றும் ரஞ்சனி, ராஜினி, பத்மினி (பாலா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், முருகதாஸ், சுதாகரன், கோகுலன் ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (அதிபர்), திருமேனிப்பிள்ளை (ஆசிரியை) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் (வர்த்தகர்), அருளலிங்கம் (கிராமசேவையாளர் வேலணை) மற்றும் வரதலட்சுமி, லோகநாயகி (ஆசிரியை) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (23.01.2025) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(cs.57267) (N-1)

தகவல்:
இ. வசந்தி (ஆசிரியை)
சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 09 . 1953



மறைவு
19 . 01 . 2025

## திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன்

வேலணை மேற்கு, 8ம் வட்டாரம், முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 40, நாயன்மார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் வேலணை மேற்கு காலஞ்சென்ற இராசரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம்- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலம் அருணகிரிநாதன் (முன்னாள் அதிபர், வேலணை மத்திய கல்லூரி, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தீவகம், யாழ்வலயம்) அவர்களின் அன்பு மனைவியும் நிருஷா (Web designer-அவுஸ்திரேலியா), அருண்ராஜ் (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி), கார்த்திகா (ஆசிரியர், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் குருபரன் (Quantity Surveyoring-அவுஸ்திரேலியா), கிருஷாந்தி (ஆராய்ச்சி உதவியாளர், பனை ஆராய்ச்சி நிறுவனம்), ஏகாந்தன் (உதவிச் செயலாளர், ஆளுநர் செயலகம், வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அதித்தி, அதிரா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சகுந்தலாதேவி,சதானந்தன், சண்முகானந்தன், தயானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமநாதன், சிவநாயகி, சுகந்தா, உதயசந்திரிக்கா, அனுசியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.40, நாயன்மார் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
077 346 6589, 077 412 9584

(CS 2328) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 04 . 1929



மறைவு
19 . 01 . 2025

## நடராசா ஜீவகாந்தி (மனோன்மணி)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜீவகாந்தி (மனோன்மணி) அவர்கள் நேற்று முன்தினம் (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான C.M. பொன்னையா - செளபாக்கியவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற V.P. நடராசா (இளைப்பாறிய இலங்கை வங்கி காசாளர்) அவர்களின் மனைவியும், கலாநிதி, தயாநிதி (லண்டன்), சத்தியவதனி, சுசிரேகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜ்குமார், பரதராஜன், காலஞ்சென்றவர்களான கதிரவேலுப்பிள்ளை , சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியும், தாரணி - மயூரன், அரவிந்தன், சுவர்ணா, கீர்த்தனா, கோசலா, மோகன்தாஸ், ஜலந்தரி - சதீஸ், கல்பனா, தினேஸ் - விதுரா, அனிந்திகை - சன்சயன், ரமேஸ், துர்க்கா - றமணன், சிவனங்கை ஆகியோரின் பேர்த்தியும், அனீசா, மகீழன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், பத்மநாதன், புவனசிங்கம், நேசராஜன், பூமணி, லீலாவதி, பராசக்தி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/57281) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 01 . 1956



மறைவு
20 . 01 . 2025

## குமாரகுலசிங்கம் குமாரவேல்

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட குமாரகுலசிங்கம் குமாரவேல் அவர்கள் நேற்று (20.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரகுலசிங்கம்-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவத்தம்பி-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தயாளன் மற்றும் தயாரூபன் (பிரான்ஸ்), தயாளினி (கனடா) காலஞ்சென்ற தயாகரன், மற்றும் பாலகஜன் (சிங்கப்பூர்), அனுசாளினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிதர்சனா, கங்காதரன், சிலோஜினி, சயந்தன் ஆகியோரின் மாமனாரும், யாசினி, தருனுஷன், அஸ்வினா, சித்விகா, அக்ஷா, சஜீவ், அஜீவ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் ஸ்ரீவேல், பத்மாதேவி, உமாதேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் சகோதரனும் புவனேஸ்வரி, கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.21
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர்10 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞான பானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதனும், "திருக் கல்யாணப்படலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்க சக்கரவர்த்தி செ.கந்த. சத்தியதாசனும் வழங்கவுள் ளனர். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-40)

# திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.21
சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங் கத்தின் ஒழுங்கமைப்பில் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவு 41 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவா சன் " மாணிக்கவாசகரும் அற்புதப்பத்தும் " என் னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக் கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங் கப்படவுள்ளன. (எ-40)

# குருபூஜை விழா

யாழ்ப்பாணம், ஜன.21
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்து வம் பற்றிய விழிப்புணர்வு சிவ ஸ்ரீ.பால.திருகுணா னந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சித் தர்கள் குருபூஜையும் மகாதேவ சுவாமிகள் குருபூ ஜையும் திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிர தான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங் கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வி யற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். மகாதேவ சுவா மிகள் குருபூஜையைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும், " ஈழத்து சித்தர்களில் மகாதேவ சுவாமிகள் " என்னும் விடயப்பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் க. கைலநாதனின் சொற் பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட் டுப் பரிசில்கள் வழங்கப்படும். தொடர்ந்து ஆன்மிக விருந்தினர் உரைஇடம்பெறும். குருபூஜையை முன் னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை யில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ-40)

# ஆளுநரின் கருத்தை நாம் ஏற்கவில்லை வழமைபோலவே சேவைகள் தொடரும்!

## இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21
நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து சேவை களை ஆரம்பித்து தொடர்பில், ஆளுநரின் கருத்தை நாம் ஏற்கப்போவதில்லை. எனவே, வழமைபோலவே யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையா ளர் கந்தசாமி கேதீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-
ஜனவரி மாதம் 17ஆம் திகதி ஆளுநருடனான சந்திப் பின்போது, நெடுந்தூர பேருந்துகள் புதிதாக அமைக் கப்பட்ட பேருந்து நிலையத்தில் இருந்து கடமையாற்ற வேண்டும் என்று கோரப்பட்டது. அதற்கு நாங்கள் எமது இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருடைய ஆலோசனைக்கு அமைவாகத்தான் செயற்படுவோம் என்று தெரிவித்திருந்தோம். இலங்கைப் போக்குவரத் துச் சபையின் தலைவர், அனைத்து மாவட்டங்களுக் குமான இணைந்த நேர அட்டவணையை தயாரித்து எமது தற்போதைய பேருந்து நிலையத்திலிருந்து சேவையை ஆரம்பித்து, தூரசேவை நிலையத்துக்குச் சென்று பின்னர் சேவையைத் தொடருமாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதம் ஆளுநரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு எங்களுடைய பேருந்து நிலையம் போது மானது எமது பேருந்து நிலையத்தை கட்டித் தருமாறு நாங்கள் யாரிடமும் கோரவில்லை. எமது பேருந்துகள் வீதிகளில் தரித்து நிற்கவில்லை. பொதுமக்களோ பொது அமைப்புக்களோ எமது பேருந்து நிலையத்துக்கு எதிராக எந்த முறைப்பாடும் வழங்கவில்லை. அத்து டன், புதிய பேருந்து நிலையத்தில் தனியாருடன் இணைந்த சேவையில் ஈடுபட எமது தொழிலாளர்க ளுக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே, அவற்றையெல்லாம் நிவர்த்திக்கும் பட்சத்தில் எதிர்கா லத்தில் இணைந்தசேவை தொடர்பில் சிந்திக்கலாம் - என்றார்.

இதன்போது, ஆளுநர் ஒரு கருத்தை வெளியிடுகின் றார். நீங்கள் இன்னொரு கருத்தைத் தெரிவிக்கின்றீர் கள். இவ்வாறிருக்கையில் பொதுமக்கள் எவ்வாறு பயணங்களை மேற்கொள்வது? என்று ஊடகவியலா ளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்குப் பதிலளித்த இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் வடபிராந்திய முகாமையாளர், ஆளுநர் அலுவ லகம் தாமாகவே இந்த முடிவை எடுத்துக்கொண்டனர். எனவே, இணைந்த நேர அட்டவணை இல்லாமல் செயற்பட முடியாது. அதில் பயனும் இல்லை -என்றார். (ம-125)





## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# நெல்லை உலரவிடுவதில் விவசாயிகள் நெருக்கடி!

சாவகச்சேரி, ஜன.21
தென்மராட்சிப் பிரதேச நெல் வயல்களில் காலபோக நெற் செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லை உலரவிடுவதில் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளார். நெல் உலரவிடுவதற்கு பிரதேசத்தில் போதிய இடவசதி இல் லாததாலும் தொடர்ச்சியாக வெயில் இல்லாததாலும் நெல்லை உலரவிடுவதில் சிரமங்களை எதிர்கொள்ளவேண் டியிருக்கின்றது.

முன்னைய காலங்களில் தைப்பூசமன்று அறுவடை ஆரம் பமாக சிவராத்திரி தினம்வரை அறுவடை நடந்து நெற்சூடு வைத்து, நிலம் காய்ந்த பின்னர் சூடுமிதிப்பு நடக்கும், ஆனால் இப்போது குறுகியகால நெல் விதைப்புச் செய்யப் படுவதால் வயல்களில் வெள்ளம் உள்ளபோதே இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டு ஈரத்துடன் வீடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின்னர் காயவைக்கப்படுகின்றது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (எ-25,9)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்.ஜன.21
திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடக மும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்க ளுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் எதிர்வரும் சனிக்கி ழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும் பும் மாணவர்கள் எதிர்வரும் வியாழக்கிழ மைக்கு முன்பாக தமது பெயர், விவரங் களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலு வலகத்தில் பதிவுசெய்துகொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021222239, 0776692657,0776393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளலாம். (எ-40)

# குழந்தை ம. சண்முகலிங்கத்துக்கு இன்று யாழ்.பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம்.ஜன.21
மறைந்த ஈழத்து தமிழ் நாடக ஆளுமை குழந்தை ம. சண்முகலிங்கத்துக்கு அஞ் சலி செலுத்தும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக சேர் பொன் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக்கலைகள் பீட நாடகமும் அரங்கக்கலைகளும் துறையினரின் ஏற் பாட்டில், கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறவுள் ளது.

# மீண்டும் இயங்க ஆரம்பித்தது விசுவமடு கூ.ச. களஞ்சியம்!

முல்லைத்தீவு, ஜன. 21
முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் களஞ்சி யசாலை ஒன்று 10 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 16 ஆயிரம் கிலோ நெல்லை ஒரே தடவையில் உலர வைத்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நெல்லை அரிசியாக்கி நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விசுவமடு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-25,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த எனும் சிங்கம் ஒருபோதும் திணறாதாம்

கொழும்பு, ஜன. 21

புலிகள் அமைப்புக்கு முடிவுகட்டிய
மஹிந்த ராஜபக்ச ஒரு சிங்கம். அந்த
சிங்கம் ஒருபோதும் திணறாது என்று
ஜனாதிபதி அநுரவுக்கு பதிலடி கொடுத்
துள்ளார் மஹிந்த ராஜபக்சவின் ஊட
கப் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ்
கமகே.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"டயஸ்போராக்களின் ஒப்பந்தத்தை
நிறைவேற்றவே மஹிந்தவை அவர்
தற்போது வசித்துவரும் மாளிகையில்
இருந்து வெளியேற்றுவதற்குரிய சூழ்ச்சி
நடக்கின்றது.

தமது கட்சி ஆதரவாளர்களை உற்சா
கப்படுத்துவதற்காகத் தான் ஜனாதிபதி
என்பதையும் மறந்து அநுரகுமார திஸா
நாயக்க எச்சரிக்கை விடுக்கும் வகை
யில் உரையாற்றியுள்ளார். மஹிந்த
ராஜபக்சவின் பாதுகாப்பைக் குறைத்து
அவருக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்ப
டுத்தும் முடிவு எவ்வித மீளாய்வும்
இன்றி தன்னிச்சையாக எடுக்கப்பட்டுள்
ளது என்பது அவரின் உரைமூலம் உறு
தியானது.

30 ஆயிரம் ரூபாவுக்கு எங்கு வீடு பெற
முடியும்? அந்த தொகையில் முன்னாள்
ஜனாதிபதியொருவருக்கு பொருத்த
மான வீட்டை பெறமுடியுமா? எனவே,
இது சண்டித்தனமான அறிவிப்பாகும்.
மஹிந்த ராஜபக்சவை இவ்வாறு பழி
வாங்குவதற்கு இனியும் இடமளிக்க
வேண்டாம் என மஹிந்தவை நேசிக்கும்
மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். 30
வருடகாலப் போரை முடித்த தலைவ
ருக்கு எப்படி 30 ஆயிரம் ரூபாவுக்கு
வீடுதேட முடியும்? மஹிந்த ராஜபக்சவி
டம் சண்டித்தனம் காட்ட முன்னர் பாதாள
குழுக்களிடம் அந்தச் சண்டித்தனத்தை
காண்பியுங்கள்.

மஹிந்தவை வீட்டைவிட்டு வெளியேற்
றுவதையா தேசிய மக்கள் சக்திக்கு
வாக்களித்தவர்கள் எதிர்பார்க்கின்ற
னர்? இது அரசியல் பழிவாங்கல் அல்ல.
டயஸ்போராக்களின் சூழ்ச்சி. அந்த
டயஸ்போராக்களின் ஒப்பந்தத்தையே
அரசாங்கம் நிறைவேற்றுகின்றது.
'மஹிந்த ராஜபக்சவை திணற வேண்
டாம்' என்று கூறுகின்றனர். போரை
முடித்த சிங்கம் ஒருபோதும் திணறாது"
- என்றார்.

(அ-ம-44)

---

## குழந்தை...

சங்கமித்தது. நவீன நாடகங்களுக்கு
அடித்தளமிட்டு, ஈழத்தமிழ் நாடக உல
கில் தவிர்க்கமுடியாத ஆளுமையாகச்
செயற்பட்ட குழந்தை ம.சண்முகலிங்கம்
வயோதிபம் காரணமாக கடந்த 17ஆம்
திகதி தனது 93ஆவது வயதில் காலமா
னார். அவரின் இறுதிச் சடங்கு யாழ்ப்பா
ணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள
அவரது இல்லத்தில் நேற்றுமாலை இடம்
பெற்றது. தொடர்ந்து புகழுடல் தீயுடன்
சங்கமித்தது. (அ-ம-இ-66)

## எரிபொருள்...

கூட்டுத்தாபனம் பெற்ற மூன்று பில்லி
யன் ரூபா கடனை திரும்பப்பெறும்
நோக்குடன் திறைசேரி வரி விதித்துள்
ளது. இந்தக் கடன் திருப்பிச் செலுத்தப்ப
டும் வரை வரி நீக்கப்படமாட்டாது. நாங்
கள் இலங்கை வங்கியுடனும், மக்கள்
வங்கியுடனும் கடனைத் திருப்பிச் செலுத்
துவதற்குரிய காலத்தை நீடிப்புச் செய்
வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்
றோம் - என்றார். (அ-ம-6)

## தமிழுக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன்
திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலா
சார மையமானது திருவள்ளுவர் கலாசா
ரம் மையம் என பெயர்மாற்றம் செய்யப்
பட்டது. ஆனால், பெயர்மாற்றம் தொடர்
பில் திரைநீக்கத்தின்போதுதான் தெரிந்து
கொண்டேன்.

திருவள்ளுவர் கலாசார மையம் எனப்
பெயர்மாற்றியது குற்றமல்ல. யாழ்ப்பா
ணத்துக்கே உரித்தான பெயர்களான
யாழ். கலாசார மையம் அல்லது யாழ்.
பண்பாட்டு மையம் என்று பெயர் சூட்டியி
ருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்
கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர்
கலாசார மையம் எனக் காட்சிப்படுத்தப்
பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு
மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை
கவலை தரும் விடயமாக இருந்தது. அத
னைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்
தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு
முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
சிலவேளை தெரியாமல் சில தவறுகள்
இடம்பெற்றிருக்கக்கூடும். குறித்த விட
யம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன்
நான் இன்னும் கலந்துரையாடவில்லை.
நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரை
யாடி இனிவரும் காலங்களில் தவறுகள்
இடம்பெறா வண்ணம் செயற்பாடுகளை
முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்
ளப்படும்.

வடக்கு கிழக்கில் அல்லது தமிழ்மொழி
பேசுகின்ற மக்கள் கூடுதலாக வாழு
கின்ற பிரதேசங்களில் அனைத்திலும்
தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்க
வேண்டியது என்பதில் எந்த விதமான
மாற்று கருத்தும் இல்லை. எங்களுடைய
கட்சியின் அலுவலகத்தில் பதாகை மற்
றும் துண்டுப்பிரசுரங்களை எடுத்துக்
கொண்டால் வடக்கில் தமிழ் மொழிக்கு
முன்னுரிமை அளிக்கின்ற நிலைப்பாட்
டில் நாம் இருக்கிறோம் - என்றார்.

(அ-ம-26)

## பெண்ணொருவர்...

கின்றது. குறித்த மரணம் தொடர்பாக
மன்னார் பொலிஸார் மேலதிக விசார
ணைகளை மேற்கொண்டுவருகின்ற
னர். (அ-ம-56)

## அமெரிக்க...

அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப்
வெற்றிபெற்றிருந்தார். இதைத்
தொடர்ந்தே அவர் நேற்று இரண்டாவது
தடவையாக அமெரிக்க அதிபராகப்
பொறுப்பேற்றார்.

வொஷிங்டனில் அண்மைக்காலமாகக்
கடும் குளிரான காலநிலை நிலவுகின்றது.
குறிப்பாக வெள்ளைமாளிகைப் பகுதி
யில் உறையவைக்கும் குளிர்நிலை நில
வுவதால், பாதுகாப்பைக் கருத்திற்
கொண்டு திறந்தவெளி நிகழ்ச்சிகள் ரத்
துச் செய்யப்பட்டன. உள்ளக அரங்கி
லேயே ட்ரம்பின் பதவியேற்பு இடம்பெற்
றது. துணை அதிபரான வான்ஸ் பதவி
யேற்றுக்கொண்டார்.

குடியேறிகள் மற்றும் வர்த்தகப்போர்
தொடர்பில் ட்ரம்ப் அடுத்தடுத்து சில அதி
ரடி அறிவிப்புக்களை வெளியிடுவார்
என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்
பிடத்தக்கது. (அ-ம)

## அரசாங்கம்...

கின்றார் என்று பொதுஜன பெரமுன
வின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜ
பக்ச தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ச தற்போது வசிக்கும்
அரச வதிவிடம் 46 லட்சம் ரூபா மாத
வாடகைப் பெறுமதியானது என்றும்,
ஆதலால் மஹிந்த விரைவில் அதிலி
ருந்து வெளியேற்றப்படுவார் என்றும்
ஜனாதிபதி அநுர நேற்றுமுன்தினம் தெரி
வித்திருந்தார். இதனையடுத்து, அந்த
அரசமாளிகையில் இருந்து மஹிந்த
வெளியேறத் தயார் என்று நாமல் ராஜ
பக்ச கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மஹிந்த ராஜபக்ச வசிக்கும் வீட்டை எவ
ருக்கேனும் விற்க வேண்டிய தேவை
இருப்பின் அதுபற்றி எழுத்துமூலம் அறி
வித்தால் வெளியேறுவதற்கு நாம் தயார்.
அது நாம் கேட்டுப்பெற்ற வீடு அல்ல.
அரசமைப்பின் பிரகாரம் முன்னாள்
ஜனாதிபதியொருவருக்குக் கிடைக்க
வேண்டியதொன்றாகும்.

ஜனாதிபதி அல்லது பிரதமர் ஓய்வுபெற்ற
பின்னர் பாதுகாப்பான இடத்தில் வதிவி
டம் வழங்கப்படுவது வழமையான விடய
மாகும். ஜனாதிபதியின் உரையை செவி
மெடுத்த எவரும், இது பழிவாங்கலா
இல்லையா என்பதை உணர்வார்கள்.
அரசாங்கம் அறிவித்தால் எந்நேரமும்
வீட்டை விட்டு வெளியேறத் தயாராகவே
மஹிந்த ராஜபக்சவும் உள்ளார்" - என்
றார். (அ-ம-44)

## இழப்பீடுகள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில்
நேற்று (நேற்றுமுன்தினம்) வீசிய மினி
சூறாவளியில் 50 குடும்பங்கள் பாதிக்
கப்பட்டுள்ளன. பாதிப்புத் தொடர்பான
விவரங்கள் தனித்தனியாகப் பெறப்பட்டு
இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்
துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இழப்பீடு
வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்
டுள்ளன. விரைவில் அந்த நடவடிக்கை
கள் நிறைவுசெய்யப்படும் - என்றார்.

(அ-ம-125-20)

## குற்ற...

மன்ற வளாகத்துக்கு முன்புள்ள
கோட்டை வீதியில் கடந்த 16ஆம் திகதி
வியாழக்கிழமை முற்பகல் 9.20 மணி
யளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில்
இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இரு
வர் படுகாயமடைந்தனர்.

2022ஆம் ஆண்டு உயிலங்குளம் -
நொச்சிக்குளம் பகுதியில் இரு தரப்பின
ருக்கு இடையிலான மோதலில் சகோத
ரர்கள் இருவர் வாள்வெட்டுக்கு இலக்
காகி உயிரிழந்தனர். அதே குடும்பத்தை
சேர்ந்த இருவர் உட்பட பலர் படுகாயம
டைந்தனர். இந்தச் சம்பவத்தில் வாள்
வெட்டுத் தாக்குதலை நடத்தியதாகக்
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மன்னார் நீதி
வான் நீதிமன்ற சுருக்கமுறையற்ற
விசாரணைக்கு முன்னிலையாக நீதி
மன்றுக்கு வருகைதந்தபோதே அவர்
களை இலக்குவைத்து மோட்டார் சைக்
கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு
நடத்திவிட்டு தப்பித்தனர். சம்பவத்தில்
நொச்சிக்குளத்தைச் சேர்ந்த இருவர்
உயிரழந்தனர். பெண் உட்பட இருவர்
படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வரு
கின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள்
முடுக்கிவிடப்பட்ட நிலையில், பேசாலை
யில் வைத்து சிப்பாய் ஒருவர் கைது
செய்யப்பட்டார் என்று நேற்றுமுன்தினம்
பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்து
டன் தொடர்புடைய மற்றைய நபர் உட்பட
இருவர் கடந்த சனிக்கிழமை தென்னி
லங்கையில் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கடந்த ஆண்டு
அடம்பனில் வைத்து ஒருவரை சுட்டுக்
கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய
வர். அந்தக் கொலையும் நீதிமன்றுக்கு
முன்பான கொலையும் சகோதரர்களின்
கொலைக்குப் பழிதீர்க்கும் சம்பவங்கள்
என கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூ
லமளித்துள்ளனர். சந்தேகநபர்கள்
மூவரும் மன்னார் நீதிவான் நீதி மன்றில்
நேற்று முன்தினம் மாலை
முற்படுத்தப்பட்டனர். பொலிஸ் காவலில்
வைத்து மேலதிக விசாரணைகளை
முன்னெடுக்க பொலிஸார் விண்ணப்பம்
செய்தனர். அதனை ஆராய்ந்த நீதிவான்,
நேற்றுவரை மூவரையும் பொலிஸ் காவ
லில் வைத்து விசாரிக்க அனுமதியளித்து
கட்டளை வழங்கினார். இந்த நிலையில்
மூவரும் நேற்று மாலை மன்னார் நீதி
வான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இதன்போது, சந்தேகநபர்கள் மூவரும்
நீதிவான் முன்னிலையில் குற்ற ஒப்புதல்
வாக்குமூலத்தை வழங்க மன்றிடம்
வேண்டுதல் வைத்தனர்.

அதனால் பொலிஸ் தடுப்புக் கட்டளையை
நீடிக்காது சந்தேகநபர்கள் மூவரையும்
இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்
கமறியலில் முன்வைக்க உத்தரவிட்ட
நீதிவான், இன்று குற்ற ஒப்புதல் வாக்கு
மூலம் பதிவதற்கு அனுமதியளித்தார்.

(அ-ம-26)

## கட்டுநாயக்கவில்...

விதமாகச் செயற்பட்டுவரும் குழுவினர்,
கூட்டமாகப் பறந்து திரிந்த பறவைகளை
விரட்டுவதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச்
சூட்டிலேயே இந்த அசம்பாவிதம் இடம்
பெற்றுள்ளது. (அ-ம-இ)

## 108 கிலோ...

கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்
களில் இருவர் குருநகரையும், ஒருவர்
பூநகரியையும் இன்னொருவர் மன்னா
ரையும் சேர்ந்தவர்கள் என்று பொலி
ஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்
களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும்
நகர்வுகளும் பொலிஸாரால் முன்னெ
டுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்நகர் மற்றும் நல்லூரை
அண்டிய பகுதிகளில் சிறியகுடும்பம்
ஒன்றிற்கு குளியலறையுடன்
இணைந்த தனிவீடு ஒன்று
வாடகைக்குத்தேவை.

(cs.57282) N-1

074 0101 986, 076 779 4521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை இராஜபூபதி



அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 15/37, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜபூபதி அவர்கள் கடந்த 19.01.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், லோகித மோகன், இளவேந்தன், சாந்தினி, சசிகரன், சுகந்தினி, அமுதினி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நவரட்ண ராஜா மற்றும் செல்வராஜா, தவராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதானந்தராஜா அவர்களின் பாசமிகு சிறிய தாயாரும், இராஜேஸ்வரி, சந்திரப்பிரியா, சுகந்தினி, ஜெயானந்தன், புஸ்பராணி, சசிக்குமார், பகீரதன், ஜமுனா ஆகியோரின் அன்பு மாமியும், கனிமொழி, சாங்கவி, அபிராம், ஆருதி, அனுஷ்கா, ஜெனிஸ்கா, சாகித்யன், விஜங்கா, அபிகேஷன், அகிம்சன், அஸ்விகன், வைஷ்ணவி, ஆரபி, நிலாணி, ஐசானி, பிரவீன், அருவின், பிரவியா, அஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

15/37, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.
077 1185 116

(CS 2328) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org